**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

**CC 20/2024**

**PW- 1**

பெயர் : ரஞ்சித் குமார்

த/பெ : ராஜேந்திரன்

தேதி :22-04-2024

சாட்சி திரும்ப அழைக்கப்பட்ட சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல, எனது வீட்டில் வைத்து தான் எழுதினேன் அச்சமயத்தில் என்னுடன் எனது மனைவி இருந்தார். புகாரை நான் சொல்ல சொல்ல எனது அண்ணன் எழுதினார். அதன் பின்பு புகாரை படித்து பார்த்து விட்டு காவல் நிலையத்தில் கொடுத்தோம் என்றால் சரிதான். புகாரில் களவு போனதாக குறிப்பிட்டுள்ள நகைகளுக்கு உண்டான ரசீதை கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையின் போது மேற்படி களவு போன நகைகள் போட்டு வைக்கப்பட்டிருந்ததாக சொன்ன டப்பாவினை போலீசில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எனது புகாரில் செல்போனை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் கூறியுள்ளேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் செல்போனை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான், புகார் எழுதும்போது சொல்லவில்லை புகார் கொடுத்து பின்பு தான் சொன்னேன். எனது வீட்டருகே 10, 15 வீடுகள் உள்ளது என்றால் உள்ளது. மேற்படி அனைத்து வீடுகளிலும் குடியுள்ளனர் என்றால் உள்ளனர். நான் ஊருக்கு சென்ற சமயத்தில் பீரோவை பூட்டி விட்டு சென்றேன் என்றால் சரிதான். நான் எனது புகாரிலோ, போலீஸ்

விசாரணையிலோ மேற்படி பீரோக்கள் உடைக்கப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான் சாவியும் வீட்டில் தான் இருந்தது சாவியை வைத்து தான் பீரோ திறக்கப்பட்டது. உடைந்த கதவின் பாகங்களை போலீசார் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். பீரோவை திறக்க பயன்படுத்திய சாவியை போலீசார் கைப்பற்றி அதில் கைரேகை நிபுணர்களைக் கொண்டு கைரேகை எடுத்தார்கள் என்றால் பீரோவை திறக்க அந்த நபர்கள் பயன்படுத்திய சாவி கிடைக்கவில்லை.

3. அவ்வாறு சாவி கிடைக்காத பட்சத்தில் சாவியைக் கொண்டுதான் பீரோவை திறந்ததாக உறுதியாக சொல்ல இயலாது என்றால் பீரோவை பூட்டிவிட்டு சாவியை பீரோவிற்கு மேலயே வைத்திருந்தோம், ஆனால் சாவி அங்கு இல்லை அதனால் அந்த சாவியை வைத்து தான் பீரோவை திறந்து இருப்பார்கள். மாலை 6.00 முதல் 6.30 மணி அளவில் 3 போலீசார் வீட்டிற்கு வந்தார்கள். போலீசார் வீட்டுக்கு வந்த சமயத்தில் 4-5 பேர் வீட்டுக்குள் இருந்தோம். புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் எங்கள் வீட்டில் இரண்டு பீரோக்கள் இருந்ததாகவும் அதில் இருந்த துணிகள் கலைக்கப்பட்டு இருந்ததாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. காவல் நிலையத்திற்கு எனது மனைவி என்னுடன் வந்தார் வேறு யாரும் உடன் வரவில்லை. போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்த சமயத்தில் குலோத்துங்கன் மற்றும் கார்த்திக் ஆகியோரை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள். போலீசார் வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்ற போது ஒன்றாம் எதிரியை பார்த்ததாக இவ்வழக்கிற்காக பொய்யாகக் கூறியுள்ளேன் என்றாலும், நான் சொல்வது போல் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையான எதிரியை பிடிக்க இயலாமல் ஒன்றாம் எதிரியை இவ்வழக்கில் போலீசார் சேர்த்துள்ளனர் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

CC 20/2024

PW- 2

பெயர் : குலோத்துங்கன்

த/பெ : முத்துச்சாமி

தேதி :22-04-2024

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்ட சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ரஞ்சித் குமார் எனது பக்கத்து தெருக்காரர். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் எனது வீடு குறிப்பிடவில்லை என்றால் சரிதான், எனது வீடு அதில் வராது. பார்வை மகஜரில் சம்பவ இடத்தை சுற்றிலும் யார் யாரது வீடுகள் உள்ளது என்று குறிக்கப்பட்டு இருந்தது என்று என்னால் கூற இயலுமா என்றால் அவர்கள் பெயர் சரியாக தெரியவில்லை ஆனால் போலீசார் அங்கு விசாரித்து தான் அதனைக் குறித்துக் கொண்டார்கள். பக்கத்து வீட்டுக்காரர்களின் முகம் எனக்கு தெரியும், ஆனால் பெயர் தெரியாது. போலீசார் அங்கு வந்த சமயத்தில் பொதுமக்கள் எத்தனை பேர் கூடியிருந்தனர் என்றால் 5-6 பேர் இருந்தார்கள். அவர்கள் அருகே குடியிருப்பவர்கள் என்றால் சரிதான்.

2. போலீசார் அவர்களை விசாரித்து கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். ரஞ்சித் குமார் எனக்கு 4-5 ஆண்டுகளாக பழக்கம். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது ரஞ்சித் குமாருக்கு ஆதரவாக சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவ இடத்தில் பார்வை மகஜர் தயார் செய்திருந்தால் அருகில் இருப்பவர்களை விசாரித்து கையெப்பம் பெற்று இருப்பார்கள் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

CC 20/2024

PW- 3

பெயர் : நல்லதம்பி

த/பெ : கே.வி. அழகன்

தேதி :22-04-2024

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்ட சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் நகையை கைப்பற்றியதற்கான கேமரா பதிவுகளை நான் போலீஸில் ஒப்படைக்கவில்லை என்றால் ஒப்படைக்கவில்லை. அந்த கேமரா பதிவுகள் இருந்ததா என்றால் அச்சமயத்தில் இருந்திருக்கும், தற்போது அழிந்திருக்கும். நகைகளை கைப்பற்றியதற்கான கேமரா பதிவுகளை போலீசார் கேட்கவில்லை என்றால் சரிதான். அதற்கு முன்பாக கார்த்தி எங்கள் கடையில் நகைகளை அடமானம் வைத்துள்ளாரா என்றால் அதற்கு முன்பு அவரை பார்த்ததில்லை. அவரை கேமரா புட்டேஜில் தான் பார்த்தேன். புட்டேஜில் இருப்பது யார் என்று என்னால் உறுதியாகக் கூற இயலாது என்றால் சரிதான். எதிரியின் பெயர் கார்த்தி என்று போலீஸ் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கார்த்தியின் தாயார் நாகஜோதி தான் நகை அடமானம் வைத்தார். போலீஸ் சொன்னதின் பேரில் இவ்வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 20/2024** |
| Deposition of witness | : | **PW-4** |
| Name | : | **நாகஜோதி** |
| Husband Name | : | **ராஜா** |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **41** |

**Both accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.04.2024.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது தோட்டத்துப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் டெய்லராக உள்ளேன். ஆஜர் எதிரி புவனேஸ்வரன் எனது மகன் ஆவார். ரூபாய் 20,000/- கைப்பற்றப்பட்டதற்கான கைப்பற்றுதல் மகஜரில் மூன்றாவது காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் அடகு வைத்த நகைகள் எனது சொந்த நகையாகும். போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை அடித்து மயங்கடித்தார்கள். எனது மகனையும் அடித்தார்கள். நகையை கொடு என்று மிரட்டி என்னை அடிக்க வந்தார்கள். நான் அடகு வைத்த எனது நகைக்கு உண்டான புத்தகத்தை காண்பித்தேன். நான் அடகு வைத்த எனது

நகையை தான் போலீசார் கைப்பற்றியுள்ளார்கள். அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமானிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகளை கேட்க அனுமதிக்கப்படுகிறது)**

2. நான் நகைகளை எப்போது அடகு வைத்தேன் என்றால் இரண்டு மாதங்களுக்கு முன்பாக அடகு வைத்தேன், தேதி ஞாபகம் இல்லை. நான் அடகு வைத்ததை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் தற்போது கொண்டு வரவில்லை. அதனை போலீசார் ஏற்கனவே வாங்கிக் கொண்டார்கள். எந்த போலீசார் வாங்கினார்கள் என்றால் தெரியவில்லை. நான் அவருக்கு போன் செய்த போது தேர்தல் முடிந்து வாங்கிக் கொள்ளுமாறு கூறினார். எனது மகனுக்கு ஏற்கனவே இதே போன்று வழக்குகள் இருந்தது என்றால் சரிதான், ஆனால் உண்மையில் எனது மகன் அவ்வாறு எதுவும் செய்யவில்லை.

3. எனது மகன் ஏற்கனவே கைப்பற்றிய நகைகள் தனக்கு சொந்தமான நகைகள் இல்லை என்று கூறியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னை போலீசார் மிரட்டி நகைகளை கைப்பற்றியதாக ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. கைப்பற்றிய நகைகள் எனது நகைகள் என்று காட்டுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் நான் ஏற்கனவே அடகு வைத்த எனது நகைகளை ஏஜென்டிடம் விற்று விட்டேன், ஆனால் போலீசார் ஏஜென்டிடம் அதற்கு பணம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். போலீசார் ஏஜென்டிடம் ரூபாய் ஒரு லட்சம் பணமும் பெற்றுக் கொண்டார்கள்.

அந்த ஏஜென்டின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கைப்பற்றிய நகைகளுக்கும் எனது நகைகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

4. நான் எனது மகனை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற எனது நகைகளை அடகு வைத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அடகு வைத்த நகைக்கடையின் பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் சிசிடிவி பதிவுகளில் இருப்பது நானும், எனது மகனும் தான். நாங்கள் நகையை மீட்பதற்காக அச்சமயம் சென்றோம். நான் எனது மகனை காப்பற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 5.3.2024 ஆம் தேதி போலீசார் என்னை நகைக்கடைக்கு அழைத்துச் செல்லவில்லை என்றால் நான் நகைக்கடைக்கு சென்றேன். அதற்கு முந்தைய தினம் இரவே எனது மகனை அழைத்துச் சென்று விட்டார்கள் மறுநாள் நான் சென்றேன்.

(இரண்டாம் எதிரியின் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 20/2024 |
| Deposition of witness | : | CW-1 |
| Name | : | செல்வராஜ் |
| Father Name | : | கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 20 |

**Both accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.04.2024.

<u>நீதிமன்ற விசாரணை</u>

1. நான் தற்போது தோட்டத்துப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் தோட்டத்து பாளையம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள ஸ்ரீஅபிராமி பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் உதவியாளராக உள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜாரில் உள்ள சாட்சி நாகஜோதி எனக்கு தெரியும். அவர் கடந்த 13.2.2024ஆம் தேதி அவரது குடும்பத் தேவைக்காக இரண்டு கிராம் நகை அடகு வைத்துள்ளார். அந்த நகையை அவர் மீட்கவில்லை. நான் மார்ச் மாதம் இரண்டாம் தேதி வாக்கில் ஊருக்கு சென்று விட்டேன். அச்சமயத்தில் மேற்படி நாகஜோதி அடகு வைத்த நகை திருட்டு நகை என்று சொல்லி போலீசார் கைப்பற்றி உள்ளார்கள். தற்போது எங்கள் நகைக்கடையின் ரசீது புத்தகத்தையும் ஆஜர் செய்கிறேன். அவற்றில் கடந்த 13.2.2024 ஆம் தேதியில்

சாட்சி நாகஜோதி நகை அடகு வைத்ததாக உள்ள ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி ரசீது புத்தகம் நீ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.